www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## ஒன்பதாம் வகுப்பு

**நேரம்: 1.30 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள்: 50**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-**

**I. பலவுள் தெரிக:-** 10×1=10

1) சரியான கூற்றைத் தெரிவு செய்க:
   1) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை
   2) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு
   3) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்

   அ) 2, 3 சரி, 1 தவறு ஆ) 1, 3 சரி, 2 தவறு
   இ) மூன்றும் சரி ஈ) மூன்றும் தவறு

2) மரவேர் என்பது ________ புணர்ச்சி

   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

3) பொருத்தமான விடையைத் தேர்க

   அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்
   ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
   இ) சீவகசிந்தாமணி - 3. அறஇலக்கியம்
   ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்

   அ) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 ஆ) அ-2, ஆ-3, இ-1, ஈ-4
   இ) அ-3, ஆ-1, இ-4, ஈ-1 ஈ) அ-4, ஆ-1, இ-2, ஈ-1

4) திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ________

   அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
   இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியமாடும் பாவை உருவங்கள்

5) கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

   அ) சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகிழ்உ முன்னிலையில் அமைந்துள்ளன
   ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
   இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!
   ஈ) வாழ்க்கையில் அடிப்படைத்தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

6) பல்லவர்காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று ________

   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திரிபுவன வீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

7) அதிரப்புகுதக் கனாக் கண்டேன் - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

   அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்
   இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்
   ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



8) மலை என்னும் பொருள் தரும் சொல் ________
அ) கல் ஆ) வேலை இ) புறவு ஈ) மல்லல்

9) இராவண காவியத்தின் ஆசிரியர் ________
அ) பாரதியார் ஆ) உமறுப்புலவர்
இ) புலவர் குழந்தை ஈ) பெருஞ்சித்திரனார்

10) இசைத்தூண்கள் ________ மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டன
அ) சோழ ஆ) விஜயநகர இ) நாயக்க ஈ) பல்லவ

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:- குறுவினா 5×2=10**

11) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
12) கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
13) நீங்கள் விரும்பிப் படித்த நூல்கள் எவை?
14) நடுதல் என்றால் என்ன?
15) இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக் குறிப்பு தருக.
16) மொழிபெயர்க்க:- i) Walk like a bull ii) Love your food
17) தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:- சிறுவினா 4×3=12**

18) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளை எழுதுக.
19) இராவண காவியத்தில் இடம்பெற்றுள்ள இரண்டு உவமைகளை எழுதுக.
20) சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
21) கைபிடி, கைப்பிடி - பொருள் வேறுபாடு, புணர்ச்சி விதி தருக.
22) உனக்குப் பிடித்தவை எவை? உன் பொறுப்புகள் எவை? (எவையேனும் இரண்டு)
23) ஆண்டாளின் கலைக்காட்சியை எழுதுக.

**IV. எவையேனும் இரண்டுக்கு மட்டும் விடையளி:- 5 மதிப்பெண் வினாக்கள் 2×5=10**

24) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



25) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்குக் கடிதம் எழுதுக.

26) அ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படும் கருத்துகள் யாவை? (அல்லது)
ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கைக் காட்சிகள் யாவை?

**V. கட்டுரை வடிவில் விடை தருக நெடுவினா. 1×8=8**

27) அ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கவையாக, வரலாற்றுப் பதிவுகளாக இருப்பதை நிறுவுக. (அல்லது)
ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்து எழுதுக.

********

CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com